04.04.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.02/2021**

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அருள்செல்வம் | | |
| **த/பெ** | சாரங்கபாணி | **மதம்** | |
| **கிராமம்,** | திருநகர் | **தொழில்** | |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 68/ 2025 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | |

கூடுதல் இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார். முதல் விசாரணை

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரம் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துப்பார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன். கடந்த 05/12/1938 ந் தேதியில் தனபாக்கியம் அம்மாள் பெயரில் ஏற்படுத்தப்படட கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.1 ஆகும். கடந்த 01/09/1958 ந் தேதியில் முனுசாமி உடையார் பெயரில் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரம் அசல் வா.சா.ஆ. 2 ஆகும். கடந்த 14/11/1966 ந் தேதியிட்ட முனுசாமி உடையார் வழங்கிய கடன் பைசல் ரசீது அசல் வா.சா.ஆ. 3 ஆகும். கடந்த 05/06/1968 ந் தேதியில் தனபாக்கியம் அம்மாள் எழுதிக்கொடுத்த அசல் உயில் ஆவணம் வா.சா.ஆ. 4 ஆகும். கடந்த 29/06/1968 ந் தேதியிட்ட

தனபாக்கியம் அம்மாளின் இறப்பு சான்று வா.சா.ஆ. 5 ஆகும். கடந்த 03/12/1999 ந் தேதியில் விழுப்புரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 477/1998 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை முறையே வா .சா.ஆ-.6 மற்றும் வா.சா.ஆ- 7 ஆகும். கடந்த 10/12/1996 ந் தேதியிட்ட விழுப்புரம் நகர ஆணையர் அவர்கள் பிறப்பித்த சொத்து வரி பெயர் மாற்ற உத்தரவு வா.சா.ஆ. 8 ஆகும். கடந்த 15/02/1999, 03/03/1999, 15/02/1999, 26/03/2014 ஆகிய தேதிகளில் யசோதையம்மாள் பெயரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் முறையே வா.சா.ஆ. 9 முதல் 12 வரையிலானவை ஆகும். கடந்த 19/12/2020 ந் தேதியில் 2 ம் வாதி நகர காவல் நிலையத்தில் அளித்த புகார் வா.சா.ஆ. 13 ஆகும். மேற்படி புகாருக்கான புகார் மனு ஏற்பு ரசீது வா.சா.ஆ. 14 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.